**சாட்சியின் வாக்குமூலம்**

**திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்**

**அசல் வழக்கு எண் : 98/2012**

**PW1 – திருமதி.கிருஷ்ணவேணி (எ) மல்லிகா, க/பெ.முத்து**

**26.09.2024**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு 2, 4 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**2, 4 மற்றும் 8ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் 13.15 மணி**

இந்த வழக்கில் நான் முதல் வாதி என்றால் சரிதான். அமுதா என்னுடைய சகோதரி என்றால் சரிதான். தாவா வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு சொத்து வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி சரோஜா எனது சிறிய தாயார் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு இரண்டாவது தாரம். ஆசிர்வாதம், இயேசம்மாள், ஹரிதாஸ் ஆகியோர் சரோஜாவின் வாரிசுகள் என்றால் சரிதான். மனோகரன், ரவி, லட்சாதி என் சித்தப்பா தன்ராஜின் வாரிசுகள் ஆவார்கள். என் தகப்பனார் பெயர் வேணு. என் தகப்பனார் தற்போது உயிருடன் இல்லை. என் சித்தப்பா தன்ராஜ் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. என் தாயார் பெயர் சிவகாமி, அவரும் தற்போது உயிருடன் இல்லை. என் பெற்றோருக்கு எப்போது திருமணம் நடந்தது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் நிரூபண வாக்குமூலத்தில் என் தாயார் இருக்கும்போதே என் தந்தைக்கு இறந்துபோன முதல் பிரதிவாதி சரோஜாவுடன் தொடர்பு இருந்தது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். எத்தனை வருடங்கள் தொடர்பில் இருந்தனர் என்று என்னால் கூறமுடியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கிற்காக நான் பொய்யாக அவ்வாறு கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. என் தாயார் சிவகாமிக்கும் காவங்கரையில் உள்ள நவமணி என்ற நபருக்கும் தொடர்பு இருந்தது என்றாலும் நாங்கள் சிறுவயதில் இருக்கும் போதே என் தாயார் மேற்படி நவமணியுடன் சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. நாங்கள் சிறுவயதில் இருக்கும்போதே எங்களை வளர்க்க

முடியாது என்பதால் பஞ்சாயத்தை கூட்டி முதல் பிரதிவாதி சரோஜாவை என் தந்தை திருமணம் செய்துக்கொண்டார் என்றால் சரியல்ல. என்னையும் என் சகோதரியையும் வயது வரும் வரை முதல் பிரதிவாதி சரோஜா நல்ல முறையில் வளர்த்து திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. என் திருமணத்தின்போது சரோஜா இல்லை, அவர் அவருடைய தாயார் வீட்டிற்கு அடிக்கடி சென்றுவிடுவார். என் திருமணத்தின்போது என் அம்மாவும் இல்லை. சித்தியும் இல்லை. என் தந்தை தான் என் திருமணத்தை நடத்தி வைத்தார். என் தந்தை எந்த வருடம் இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு சீர்வரிசை அனைத்தும் செய்தது என் தந்தை என்றால் சரிதான். என் அம்மா சிவகாமி நவமணியுடன் சென்று அவர்களுக்கு 4 குழந்தைகள் ராஜா, மணிமாறன், மணிமொழி, பர்மா உள்ளனர் என்றால் சரிதான். 4 பேரில் கடைசி மகன் பர்மா இறந்துவிட்டார், மற்ற 3 பேரும் உயிருடன் உள்ளனர். எனக்கு 3 மகள்கள், 3 மகன்கள் உள்ளனர். 3 மகள்களில் என் கடைசி மகள் ரத்தினம் இறந்துவிட்டார். தேவா, ஸ்ரீனிவாசன், வினோத்குமார் ஆகிய 3 பேரும் மகன்கள் ஆவார். விசாலாட்சி, வரலெட்சுமி, ரத்தினம் என்னுடைய மகள்கள் என்றால் சரிதான். 2வது மகள் வரலெட்சுமியை நவமணியின் மகன் மணிமாறனுக்கு திருமணம் செய்துக்கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். என் அம்மா நவமணியுடன் சென்றபிறகு எங்களை பார்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு அனைத்து சவரட்சனைகளை செய்தது என் தந்தை என்றால் சரிதான். தாவா வழக்கு என் மூதாதையரின் சொத்து என்று கூறியுள்ளேன், அது யாருடைய சொத்து என்றால் என் தந்தை வேணுவின் சொத்து ஆகும். மூதாதையரின் சொத்து என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. என் தாத்தாவின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் தாத்தாவின் பெயர் குப்பன் என்றால் எனக்கு தெரியாது. அவருக்கு 3 மகன்கள் வேணு, தன்ராஜ், சின்னக்கண்ணு ஆவார். சின்னக்கண்ணு இறந்துவிட்டார் என்றால் திருமணம் செய்துக்கொள்ளவில்லை, அவர் இறந்துவிட்டார். சின்னக்கண்ணு இறக்கும்போது அவருக்கு 51 வயது என்றால் சரிதான். தாவா சொத்து என் பாட்டனார் குப்பன் ஏகாட்டூரில் இருந்து பாகல்மேட்டில் குடியேறி அங்கு எந்த சொத்தும் வாங்கவில்லை என்றால் சரிதான். அவருடைய 3 மகன்கள் வேணு, தன்ராஜ், சின்னக்கண்ணு ஆகியோர் தான் வேலை செய்து சொத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். அவர்கள் 3 பேரும் உழைத்து அந்த சொத்தை என் அப்பா பெயரில் வாங்கினார்கள் என்றால் என் அப்பா பெயரில் பட்டா உள்ளது. நான் எந்த

வருடம் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் 2012ம் வருடம் தாக்கல் செய்தேன். இந்த வழக்கிற்கு முன்பாக 24.01.2001 அன்றே 38 செண்ட் சர்வே எண். 39/2பி ன் படி எனக்கும் என் சகோதரிக்கும் உயில் எழுதி பதிவு செய்து கொடுத்தார் என்றால் உயில் எழுதிக்கொடுக்கவில்லை. என் அப்பா இறக்கும் தருவாயில் கைநாட்டு வாங்கியுள்ளார்கள், என் அப்பா எனக்கு எழுதி வைத்தது குறித்து எதுவும் கூறவில்லை. நான் படித்துள்ளேனா என்றால் படிக்கவில்லை. மேற்படி உயில் ஆவணம் ஆரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 3/2001 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

**<u>குறுக்கு விசாரணை பகுதி முடிந்த நேரம் 13.45 மணி</u>**

**<u>உணவு இடைவேளைக்கு பிறகு குறுக்கு விசாரணை தொடர்ச்சி . நேரம் 15.20 மணி</u>**

தாவா சொத்திற்கு 15 சொத்துக்கள் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 14வது சொத்து சர்வே எண். 39/2பி ஐ பற்றி நான் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது. சொத்துக்கள் அனைத்தும் பாகல்மேடு, புன்னபாக்கம் கிராமத்தில் உள்ளன என்றால் சரிதான். சொத்துக்கள் அனைத்தும் என் தகப்பனார் வேணு மற்றும் என் சித்தப்பா தன்ராஜிற்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 2001க்கு முன்பாக கிராம பஞ்சாயத்தார் முன்னிலையில் வாய்மொழியாக சரிபாதியாக பாகப்பரிவினை செய்து அதன்படி அனுபவித்து வருகிறார்கள் என்றால் அவ்வாறு பாகப்பிரிவினை எதுவும் செய்யவில்லை, என்னிடம் எதுவும் கூறவில்லை. அவ்வாறு பாகப்பிரிவினையின் படி தான் 2001ம் வருடம் 39/2பில் 38 செண்ட் எனக்கும் எனது சகோதரிக்கும் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா இறந்தபிறகு தான் சொத்தை பிரித்தார்கள். அவ்வாறு பயிர்செய்து வந்த நிலத்தை 05.05.2006 அன்று என் சகோதரர்கள் ஆசீர்வாதம், ஹரிதாஸ் மற்றும் சித்தப்பா தன்ராஜின் மகன்களும் பாகப்பிரிவினை செய்து பதிவு செய்துக்கொண்டார்கள் என்றால் அதுபற்றி அப்போது எனக்கு தெரியாது, பின்னர் தான் தெரியவந்தது. மேற்படி ஆவணத்தை நான் வா.த.சா.ஆ.3 ஆக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் சித்தப்பா மகன்கள் மனோகரன், லட்சாதி, ரவி மேற்படி சொத்தை குறித்து 3 பேரும் பாகப்பிரிவினை செய்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். 2012ல் நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாகவே தாவா சொத்து வாய்மொழியாக என் அப்பாவிற்கும் என் சித்தாப்பாவிற்கும் பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றாலும் நான் வழக்கு

தொடர்ந்த 2012ம் வருடம் மேற்படி சொத்து கூட்டுக்குடும்ப சொத்தாக இல்லை என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே 2001ம் வருடம் உயில் சாசனம் மூலம் சர்வே எண். 39/2பி கீழ் 38 செண்ட் எனக்கும் என் சகோதரிக்கும் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. பாகல்மேடு கிராமத்தில் உள்ள வரதராஜலு நாயுடு தெரியுமா என்றால் தெரியும். அவர் அப்பா பத்மநாப நாயுடு என்றால் எனக்கு தெரியாது. 2006ம் வருடம் 17.08.2006 அன்று சர்வே எண். 39/2பி பாகல்மேடு கிராமத்தில் எங்கள் அப்பாவிற்கு சொந்தமான சொத்தை வரதராஜலு நாயுடுக்கு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் நான் எழுதிக்கொடுக்கவிலலை. என் அப்பா வந்து கையெழுத்து போடச்சொன்னார். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள போட்டோவில் இருப்பது நான் தான். மேற்படி ஆவணம் ஊத்துக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 130/2006 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் என் கணவர் முத்து சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் என் தங்கையின் கணவர் ஏகாம்பரம் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் 39/2பி சொத்து என் அப்பா என் மீது உயில் எழுதி அது சரிபாகமாக பிரிக்கப்பட்டு அதில் வரதராஜலு நாயுடுக்கு பவர் கொடுக்கிறேன் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அதில் ஆவண எண். 3/2001 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் பவர் ஏஜென்டான வரதராஜலு நாயுடு என் பாகமான 19 செண்ட் மற்றும் என் தங்கை அமுதாவின் பாகமான 19 செண்ட் யும் சேர்ந்து 29.01.2007 அன்று வரதராஜலு நாயுடு மனைவி கௌசல்யா பெயரில் கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் அவர் தான் என் சொத்தை வைத்துள்ளார். அதில் என் தங்கையின் கணவர் ஏகாம்பரம் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் அவர் போடவில்லை. கௌசல்யாவிற்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தின் எண். 428/ 2007 என்றால் எனக்கு தெரியாது. கௌசல்யா வரதராஜலு நாயுடு மனைவி என்றால் எனக்கு தெரியாது. கௌசல்யா 38 செண்ட் நிலத்தை 13.12.2007 அன்று பவர் ஏஜென்ட் ரமேஷ்க்கு பவர் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தற்போது பவர் ஏஜென்ட் ரமேஷ் 5வது பிரதிவாதி மனோகருக்கு சர்வே எண். 39/2பி 38 செண்ட் நிலத்தில் 20 செண்ட்

நிலம் கிரையம் செய்துக்கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மீதி 18 செண்ட் பவர் ஏஜெண்ட் ரமேஷிடம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. 39/2பி பாகல்மேடு கிராம பஞ்சாயத்திற்கு உட்பட்ட சொத்தை என் தந்தை நான் வழக்கு தொடர்வதற்கு முன்பாக எங்களுக்கு கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு கொடுக்கவில்லை, அவர்கள் தான் அனுபவித்து வருகிறார்கள். தாவா சொத்தில் 12/30 பாகம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களின் கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. எனக்குரிய பாகம் 39/2பி ஏற்கனவே கொடுக்கப்பட்டதால் நான் கிரைய பத்திரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 15 சொத்துக்களில் 6 சொத்துக்கள் மட்டும் 2 ஏக்கருக்குள் தான் 2 மற்றும் 4 பிரதிவாதிகளின் வசம் உள்ளது என்றால் இந்த வழக்கு தொடர்ந்த பிறகு எல்லா சொத்தையும் விற்றுவிட்டார்கள். 2012 வழக்கு தொடர்வதற்கு முன்பாக என் தந்தை புன்னபாக்கத்தை சேர்ந்த கோபிரெட்டியாருக்கு வழக்கு சொத்துக்களில் 254/1ஏ, 251/1ஏ2, 264/1பி, 264/2ஏ சொத்துக்களை கிரையம் செய்துக்கொடுத்தார் என்றால் சரிதான். என் தந்தை என்னிடம் கையெழுத்து போடச்சொன்னார், நான் பூர்விக சொத்து என்பதால் கையெழுத்து போட்டேன். 2012ம் வருடம் வழக்கு தொடர்வதற்கு முன்பாக 2006ம் வருடம் என் சித்தப்பா மகன்கள் அவர்களுடைய பாகத்தையும் விற்றுவிட்டார்கள் என்றாலும் அவர்களுக்கு தற்போது 25 செண்ட் தான் மீதம் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களுக்கு எல்லாம் கிரையம் ஆவணம் மூன்றாம் தரப்பினர் பெயரில் இருப்பதால் நான் அவற்றின் கிரைய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை எல்லாம் ஒரு செண்ட் விலை ரூ.2 லட்சம் என்று கூறியுள்ளேன். தற்போது 2024 வரை ஒரு செண்ட் விலை ரூ2 லட்சம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் மதிப்பை நான் அதிகமான நிர்ணயம் செய்து இந்த வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழிகாட்டும் மதிப்பு சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெறவில்லை என்றால் எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே என் அப்பாவும் என் சித்தப்பாவும் வாய்மொழியாக பிரித்துக்கொண்டு 3 மின்சார இணைப்பு சர்வே எண்.38/2ஏ4 சர்வீஸ் எண்.1 என்றால் எனக்கு தெரியும். சர்வீஸ் எண்.1 என் தந்தை பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

சர்வே எண். 43/1 சர்வீஸ் எண். 140 என் தந்தை பெயரில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 38/2சி2 சர்வீஸ் எண். 273 என் தந்தை வேணு பெயரில் உள்ளது என்றால் சரிதான். 3 சர்வீஸ் எண்களும் என் தந்தை பெயரில் உள்ளதை 2006ம் வருடம் என் சகோதரர்களும் என் சித்தப்பா மகன்களும் சர்வீஸ் எண்.1ல் பாதி பாகமாக பிரித்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. 2006ம் வருடம் சர்வீஸ் எண்.140ல் என் சித்தப்பா மகன்கள் பிரித்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. 2006ம் வருடம் சர்வீஸ் எண்.273 ஐ என் தம்பி ஆசீர்வாதம் பெயருக்கு மாற்றியுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண். 124 ல் 2006க்கு பிறகு என் தம்பி ஆசீர்வாதம் சர்வீஸ் எண். 563 ஐ பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. இந்த விவரங்கள் எனக்கு தெரியாமல் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் ஏற்கனவே 39/2பி ல் எனக்கும் என் சகோதரிக்கும் 39 செண்ட் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் அதை ஆண்டு அனுபவித்து அது தற்போது 4 transactions நடந்துள்ளது என்றால் எனக்கு தெரியாது. 2012 மார்ச் மாதம் என் சகோதரர்களை பாகப்பிரிவினை கோரி அணுகினேன் என்று கூறியுள்ளேன் என்றால் நான் சென்று கேட்டேன். அவர்கள் முடியாது என்று சொல்லிவிட்டார்கள். நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். மேற்படி அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த வழக்கு செல்லாது என்றாலும் மீதமுள்ள சொத்தை என் சகோதரர்களும் சித்தப்பா மகன்களும் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. அவர்களுக்குள்ளாகவே பிரித்துக்கொண்டார்கள், என்னை அழைக்கவில்லை. 05.05.2006 அன்று நடந்த பாகப்பிரிவினை சட்டப்பூர்வமானது, அதை என்னால் ரத்து செய்யமுடியாது என்றால் சரியல்ல. 09.05.2006 அன்று என் சித்தப்பா மகன்கள் பாகப்பரிவினை சட்டப்பூர்வமானது, அதை என்னால் ரத்து செய்யமுடியாது என்றால் சரியல்ல. அவர்கள் அந்த சொத்தை ஏற்கனவே விற்றதால் அதுகுறித்து உறுத்துக்கட்டளை பெறமுடியாது என்றால் சரியல்ல. என் தந்தை இறந்தபிறகு என் தம்பி ஆசீர்வாதம் தான் எனக்கு சீர்வரிசை செய்து வந்தார் என்றால் சரியல்ல. என் மகள் ரத்தினத்தை என் தம்பி ஆசீர்வாதத்திற்கு திருமணம் செய்துக்கொடுக்காததால் தான் இந்த வழக்கை தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைத்தக்கது அல்ல

என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 16.10 மணி</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.